பேராசிரியர் செல்வா கனகநாயகம் : புன்னகையைத் தேக்கிவைத்திருந்த உதடுகள்

Written by - யமுனா ராஜேந்திரன் -
Sunday, 23 November 2014 17:52 - Last Updated Sunday, 23 November 2014 18:12

ஒரு சில விஷயங்களில் மட்டும் கருத்து முரண்பாடு கொண்டு நாம் விமர்சித்தவர்கள் அகால மரணமடைகிறபோது நமக்கு ஏற்படும் உணர்வு முதலில் குற்றவுணர்வாகவே இருக்கிறது. அவர்கள் நாம் கண்டு பேசி நம்மை உபசரித்தவர்கள், நம்மோடு கனிவுடன் உரையாடியவர்கள் என்கிறபோது நமது விமர்சனம் அவர்களது இறுதிநாட்களில் அவர்களைச் சிறிதேனும் துன்புறுத்தி இருக்குமா என நினைக்கிறபோது எழுதுவதையும் விவாதிப்பதையும் சிந்திப்பதையும் கூட விட்டுவிடலாமா என்று சமயத்தில் நமக்குத் தோன்றும். தென் ஆசிய இலக்கியம் பயிற்றுவிக்கும் பேராசிரியர், ஆய்வாளர், மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட கனடிய நண்பரான செல்வா கனகநாயகத்தின் மரணத்தைக் கேள்வியுற்றபோது இவ்வாறான மனநிலைக்கே நான் ஆட்பட்டேன்.

அவருடன் விரிவாகப் பேசுவதற்கான இரண்டு தருணங்கள் எனக்கு வாய்த்தன. இலண்டன் ஐபிசி வானொலியில் ஒலிபரப்பவென இரண்டு மணித்தியாலங்கள் அவருடன் அவரது ஆய்வு நூல்கள் குறித்து உரையாடியிருக்கிறேன். அந்த உரையாடலுக்கெனவே அவரது நூல்கள் அனைத்தையும் இரு வாரங்களில் நான் வாசித்திருந்தேன். அன்று நான்கைந்து மணிநேரங்கள் என்னுடன் இருந்தார். தொரான்றோ பல்கலைக் கழகத்தில் நடந்த தமிழியல் கருத்தரங்கில் ஈழ நாவல்கள் பற்றிய எனது கட்டுரை சமர்ப்பிப்பதற்கான பயணத்தைத் தனிப்பட்ட முறையில் அவரும் ‘காலம்’ செல்வமும் தான் பொறுப்பெடுத்துச் செய்தனர். அந்த நிகழ்வுக்கும் வந்திருந்து விவாதங்களைத் துவக்கி வைத்தவரும் அவர்தான். நான் மொழிபெயர்த்த மஹ்மூத் தர்வீஷ் கவிதைகள் நூல் குறித்தும் அவர் என்னுடன் தனிமையில் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்.

அவரது கல்லூரிக் கால நண்பரும் இலங்கை இலக்கியவாதியும் அரசியல்வாதியுமான ரஜீவ விஜேசிங்கவுடன் இணைந்து அவர் கொண்டுவந்த சமகால இலங்கைக் கவிதைகள் தொகுப்பு மிகுந்த அசமத்துவம் கொண்ட அரசியல் மறைதிட்டம் கொண்டது எனும் விமர்னத்தை சில வாரங்கள் முன்புதான் நான் எழுதியிருந்தேன். அந்நூலில் அவரது

1 / 2

பேராசிரியர் செல்வா கனகநாயகம் : புன்னகையைத் தேக்கிவைத்திருந்த உதடுகள்

Written by - யமுனா ராஜேந்திரன் -
Sunday, 23 November 2014 17:52 - Last Updated Sunday, 23 November 2014 18:12

ஈழக் கவிதை தொடர்பான அரசியல் நீக்க மொழியில் எழுதப்பட்ட அவரது கட்டுரை சுயதணிக்கை கொண்ட கட்டுரை என்றும் நான் குறிப்பிட்டிருந்தேன். கல்வித்துறைசார் ஆய்வாளராக, ஒரு படிப்பாளியாக எனது விமர்சனத்தை அவர் தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்டிருக்க மாட்டார் எனும் மனச் சமாதானத்தையே அவரது மரணத்தைக் கேள்விப்படும் இத்தருணத்தில் எனக்குள் நான் போர்த்துக் கொள்கிறேன்.

அவரது முக்கியமான நூல்களில் ஒன்று ‘கான்பிகரேஷன்ஸ் ஆப் எக்ஸைல்’. விக்ரம் சேத், தாரிக் அலி, பாப்சி சித்வா, சசி தரூர் போன்ற தென் ஆசிய எழுத்தாளர்களுடனான அவரது நேர்முகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஈழக் கவிதைகளைப் பரவலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கும் செல்வா கனகநாயகத்தின் இலக்கிய அக்கறைகள் புலம்பெயர்வும், கனடாவில் வாழும் ஆசிய ஆப்ரிக்க பூர்வகுடிக் கனடிய எழுத்தாளர்களின் அனுபவமான இரண்டு உலகங்களில் வாழ்வதான அனுபவத்தின் உடன்பாடும் முரண்பாடும் என்பதாகவே இருந்தன. படிப்பாளியும் கனிவான மனிதரும் ஆன, எப்போதுமே புன்னகையை உதட்டில் தேக்கி வைத்திருப்பவரும் ஆன செல்வா கனகநாயகத்திற்கு எனது மனமார்ந்த அஞ்சலி. அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தார்க்கும் அவரை நேசித்த அவரது நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த அனுதாபங்கள். அவரது ஆன்மா அவரது எழுத்துக்களில் அதனது சகல முரண்களுடனும் வாழும். அதன் வழி அவர் வாழ்கிறார்.

நன்றி: http://yamunarajendran.com/?p=1502

2 / 2